புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஆகஸ்ட் 14, 2025 • புரட்சி 25 • முழக்கம் 35 • விலை ரூ.6.00

## கிராமத் தீண்டாமைகளைத் தடுக்க கண்காணிப்புக் குழு

ஜாதிக் கட்டமைப்புகளில் இருந்து கிராமங்கள் விடுபடவில்லை. இதுதொடர்பாக மதுரை உயர்நீதிமன்றக் கிளை அளித்துள்ள ஒரு தீர்ப்பைக் குறிப்பிட வேண்டும்.

தென்காசி மாவட்டத்தில் தலைவன் கோட்டை என்ற கிராமத்தில் தலித் மக்கள் வாழும் பகுதிக்குக் குடிநீர் குழாய் இணைப்புகள் தரப்படவில்லை. பிற ஜாதியினர் வாழ்கிற பகுதிகளில் இருந்துதான் அவர்கள் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கிறது.

தண்ணீர் பற்றாக்குறை வந்த நிலையில் தண்ணீர் எடுக்க தலித் மக்களுக்கு ஆதிக்க ஜாதியினர் தடை போட்டனர். தண்ணீர் பற்றாக்குறை வரும்போது ஜாதி பாகுபாடும் வந்து விடுகிறது. நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தது.

நீதிமன்றம் அரசுக்கு விளக்கம் கேட்டதற்கு பிறகு, அரசு நிர்வாகம் தலித் பகுதியில் குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்கியது. இப்போது பிரச்சனை சரி செய்யப்பட்டு விட்டதாக அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கூறினார்.

‘நீதிபதி ஆர்.என். மஞ்சுளா’ தீர்ப்பில் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் முக்கியமானது.

"பொது வளங்கள் சரிசமமாக பாகுபாடு இன்றி வழங்கப்பட வேண்டும் என்பதைத்தான் வன்கொடுமை தடுப்புச் சட்டம் சுட்டிக்காட்டுகிறது" என்பதை நீதிபதி எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் அடிப்படைத் தேவைகள், பொது வளங்கள் எவ்வித ஜாதிப் பாகுபாடும் இல்லாமல் கிடைக்க அனைத்து மாவட்ட நிர்வாகங்களும் குழு அமைத்து கண்காணிக்க வேண்டும் என்ற பரிந்துரையை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அரசின் நலத்திட்டங்கள் மக்களுக்கு சென்றடைகிறதா என்பதை அரசு கண்காணிப்பது மிகவும் வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அதேபோல் பொது வளங்கள் கிராமங்களில் தலித் மக்களுக்கு போய்ச் சேர்கிறதா என்பதும் கண்காணிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

தலைமைச் செயலாளர் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள், உள்ளாட்சித் துறை அதிகாரிகள் ஆகியோர்களைக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒவ்வொரு கிராமங்களையும் ஆராய்ந்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்ற ஒரு பரிந்துரையை நீதிபதி வழங்கி இருப்பதோடு, ஆகஸ்ட் 21க்குள் இதுகுறித்து அரசு அறிக்கை ஒன்றை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருக்கிறார். இது காலத்தின் தேவை. வரவேற்கப்பட வேண்டிய தீர்ப்பு!

### வருவாய்த்துறையின் அதிரடி நடவடிக்கை
## தீண்டாமைச் சுவர் இடிப்பு

கரூர் மாவட்டம் முத்தலம்பட்டி கிராமத்தில் கடந்த சனிக்கிழமை தீண்டாமைச் சுவர் ஒன்று இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டுள்ளது. இந்த கிராமத்தில் வாழும் இடைநிலைச் ஜாதிகளான தொட்டிய நாயக்கர் என்ற சமூகத்தினர், அருந்ததியர் சமூக மக்கள் தங்கள் பகுதிக்குள் வர விடாமல் தடுப்பதற்காக இந்த தடுப்புச் சுவரை அரசு புறம்போக்கு நிலத்தில் எழுப்பி இருந்தனர். மூன்று வாரங்களுக்கு முன்பு இந்த சுவர் எழுப்பப்பட்டது.

அருந்ததியர் சமூகத்தினர் தங்கள் மாரியம்மன் திருவிழாவை கொண்டாடுவதற்கு மேடை அமைப்பதற்கும்- அரசு புறம்போக்கு நிலத்தில் கழிப்பறை ஒன்றை கட்டுவதற்கும் அவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அருந்ததியினர் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தனர். வருவாய்த்துறை அதிகாரிகள் இந்த சுவரை 15 நாட்களுக்குள் இடிக்க வேண்டும் என்றும் அரசு நிலத்தில் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு இருக்கிறது என்றும் தொட்டிய நாயக்கர் சமூக தலைவருக்கு நோட்டீஸ் ஒன்றை அனுப்பி இருந்தனர்.

இது தீண்டாமைச் சுவர் அல்ல; சமூகவிரோதிகள் உள்ளே விடாமல் தடுப்பதற்கான பாதுகாப்புச் சுவர் என்று தொட்டிய நாயக்கர் சமூகத்தின் சார்பில் பதில் அளிக்கப்பட்டது. வருவாய்த்துறை இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு மற்றொரு நோட்டீஸ் (தாக்கீது) அனுப்பியது. அடுத்த நாள் சனிக்கிழமை பகல் 11 மணிக்குள் சுவர் இடிக்கப்பட்டாக வேண்டும் என்று கெடு விதித்து எச்சரித்தது.

இரவோடு இரவாக தொட்டிய நாயக்கர் சமூகத்தினர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு சென்று முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.

நிச்சயமாக சுவர் இடிக்கப்படுவது உறுதி; எந்த மாற்றமும் இல்லை என்று கூறிவிட்டனர். அடுத்த நாள் காலை வருவாய்த்துறை அதிகாரிகள் சுவரை இடிக்கச் சென்றபோது தொட்டிய நாயக்கர் சமூகத்தினரே முன்வந்து சுவரை எடுப்பதாகக்கூறி சுவரை இடிக்கத் தொடங்கினர்.

பத்திரிகையாளர்கள் அங்கே இருக்கக் கூடாது; படம் எடுக்கக் கூடாது என்று நிபந்தனை விதித்தனர் சுவரை அவர்களே இடித்தனர் வருவாய்த் துறை எடுத்த உறுதியான நடவடிக்கையின் காரணமாக இந்த தீண்டாமைச் சுவர் இடிக்கப்பட்டுள்ளது. இதற்காக வருவாய்த் துறையை பாராட்ட வேண்டும் இந்து ஆங்கில நாளேடு மட்டும்தான் இந்த செய்தியை முக்கியத்துவம் தந்து முதல் பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறது.

## நீதிபதியின் திமிர்ப் பேச்சு தலைமை நீதிபதி கண்டனம்

ஜே.பி. பர்திவாலா குஜராத் நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது வழக்கு ஒன்றில் இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு எதிரான மோசமான கருத்துக்களை கூறினார். ‘பட்டேல்’ சமூகத்தினருக்கு தனி இட ஒதுக்கீடு கேட்டு போராடிய ஹர்திக் பட்டேல் மீது தொடுக்கப்பட்ட தேசத் துரோக வழக்கு இந்த நீதிபதிக்கு முன் 2015 டிசம்பரில் விசாரணைக்கு வந்தது. அப்போது

**“இந்த நாட்டை சீரழிப்பது எவை என்று என்னிடம் கேட்டால் ஒன்று இட ஒதுக்கீடு; மற்றொன்று ஊழல் என்று கூறுவேன்” என்று அவர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.**

அப்போது 58 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்திட்டு நீதிபதியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்தனர். தீர்மானம் மாநிலங்களவையில் தாக்கல் செய்ததை அறிந்து அடுத்த சிலமணி நேரங்களிலேயே குஜராத் மாநில பாஜக ஆட்சி நீதிபதியை அவசரமாக காப்பாற்றுவதற்கு முன் வந்தது. நீதிபதியின் முன் ஒரு மனுவை தாக்கல் செய்து அவர் இட ஒதுக்கீடு பற்றிய கருத்தை நீதிமன்ற குறிப்பேடுகளிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. அந்த குறிப்பு நீக்கப்பட்டது. தொடர்ந்து அவரது பதவி நீக்கத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

அதே நீதிபதி இப்போது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருக்கிறார். கடந்த ஆகஸ்ட் 4ஆம் தேதி அவர் அலகாபாத் நீதிபதி குறித்து திமிராக கருத்துக்களைத் தெரிவித்தார். ஒரு கிரிமினல் வழக்கில் அலகாபாத் நீதிபதியை கடும் சொற்களால் வசை பாடினார். நீதிபதி வழங்கிய உத்தரவைப் படுமோசமான மிக தவறான உத்தரவு. “கிரிமினல் வழக்குகளை விசாரிக்கவே இந்த நீதிபதி தகுதியற்றவர்” என்றும் அவர் கூறியிருந்தார். இந்த அமர்வில் நீதிபதி மகாதேவனும் உடன் இருந்தார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு இப்படிப் பேச உரிமை இல்லை என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் இப்போது இடித்து க்கூறி இருக்கிறார். நீதிபதிகளின் தவறுகளை சுட்டிக் காட்டலாம்; ஆனால் அவர்களை இப்படி அவதூறு பேசக்கூடாது. அதற்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு உரிமை இல்லை. உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அரசியல் சட்டத்தால் ஏற்கப்பட்டவர்கள் தான் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உயர் நீதிமன்ற நீதிபதியின் கருத்து தனக்கு உடன்பாடு இல்லை என்று அறிவித்து எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

## தலையங்கம்

# ஓட்டுத் திருட்டுகள்

"தேர்தல் ஜனநாயகத்தின் முதலாளிகள் வாக்காளர்கள்" என்று சொல்லப்படுவது உண்டு. இப்போது வாக்காளர்களின் உரிமையை தேர்தல் ஆணையம் பறித்துக் கொண்டுவிட்டது. இதுதான் ' இந்துத்துவ ஜனநாயகம்'.

தேர்தல் ஆணையம் நடத்திய 'ஓட்டுத் திருட்டுகளை' ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி இருக்கிறார் ராகுல் காந்தி. வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடுகள் நடக்க வாய்ப்புகள் உள்ளன என்று அந்த எந்திரத்தை வடிவமைத்த குழுவில் இடம் பெற்ற பொறியாளரே அமெரிக்காவிலிருந்து ஏற்கனவே பேட்டி அளித்துள்ளார். இப்போது ராகுல் காந்தி தேர்தல் ஆணையமே போலி வாக்காளர்களை உருவாக்கி மோசடி செய்கிறது என்ற அதிர்ச்சியான தகவலை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தி இருக்கிறார்.

கர்நாடக மாநிலத்தில் மகாதேவபுரா என்ற சட்டசபை தொகுதியை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதில் நடந்துள்ள போலி வாக்காளர் மோசடிகளை ஆதாரத்துடன் வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

தேர்தல் ஆணையம் தொடர்ந்து மோசடிகளை செய்து வருகிறது.

மகாராஷ்டிராவில் 2024 ஏப்ரலில் நடந்த மக்களவைத் தேர்தலில் இருந்த வாக்காளர்கள் எண்ணிக்கை அடுத்த 9 மாதங்களில் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் 40 லட்சம் அதிகரித்துவிட்டது. பீகாரில் சட்டமன்றத் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியலில் வழக்கமான திருத்தங்களுக்கு மாற்றாக 'சிறப்புத் தீவிர சீர்திருத்தம்' என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. அரசியல் கட்சிகளை கலந்து ஆலோசிக்கும் மரபுகளை புறந்தள்ளி இந்த சீர்திருத்தத்தை கொண்டு வந்து 65 லட்சம் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கி இருக்கிறது.

வாக்குரிமையை குடியுரிமையாக மாற்றினார்கள்; ஒரு வாக்காளர் தனது குடியுரிமையை நிரூபிக்க வேண்டும் என்று இதுவரை எந்த தேர்தல் ஆணையமும் கூறியது இல்லை. ஜூலை மாதத்தில் எதிர்க்கட்சித் தலைவரிடம் கலந்து பேசிய தேர்தல் ஆணையம், பீகாரில் 20 சதவீத போலி வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்றும் அதை கண்டறிய வேண்டும் என்றும் கூறியது. வழக்கமான நடைமுறையில் இந்த போலி வாக்காளர்களை கண்டறியும் பணிகள் நடந்து கொண்டிருந்த போதே அது முடிவுறாத நிலையில் திடீரென்று ' சிறப்புத் தீவிர சீர்திருத்தம்' என்ற திட்டத்தை அறிவிக்கிறார்கள். இது திட்டமிட்டு ஏற்கனவே உள்நோக்கத்துடன் எடுத்த ஒரு முடிவு.

ஆதார், உணவு விநியோக அட்டை, வாக்காளர் அடையாள அட்டைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வேறு 11 அடையாள அட்டைகளைதான் ஆவணங்களாகத் தர வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் வற்புறுத்துகிறது.

பீகார் போன்ற பின்தங்கிய மாநிலங்களில் வாழும் மக்கள் இந்த சான்றுகளை சமர்ப்பிக்கவே முடியாது என்பது தேர்தல் ஆணையத்திற்கு தெரியாதா?

2003-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தேர்தல் ஆணையத்தின் விதிகளில் கூட குடியுரிமைகளுக்கான சான்றுகள் வேண்டும் என்ற விதிகள் இல்லை. உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தபோது ஒரு பரிந்துரையை நீதிமன்றம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கியது. வாக்காளர் அடையாள அட்டை, உணவுப் பொருள் வழங்குவதற்கான அட்டை, ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றை ஆவணங்களாக சேர்த்துக் கொள்ளலாம் என்று பரிந்துரை செய்தது.

வாக்குப்பதிவின்போது எடுக்கப்படும் வீடியோக்களை அடுத்த சில வாரங்களிலேயே அழித்துவிட வேண்டும் என்று அண்மையில் தேர்தல் தேர்தல் ஆணையம் விதிகளை மாற்றி அமைத்தது. வாக்களித்தவர்களின் பட்டியலை கேட்கும்போது டிஜிட்டல் பதிவுகளை தர மறுக்கிறது தேர்தல் ஆணையம். ராகுல் காந்தி கேட்ட டிஜிட்டல் வாக்குப்பதிவு தரவுகளை தர மறுத்து காகிதப் பட்டியலை 7அடி உயரத்திற்கு தேர்தல் ஆணையம் அள்ளிக் கொடுத்தது. எதையும் ஆராய்ந்து விடக்கூடாது என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கமாக இருந்தது. ஆனாலும் ஒவ்வொன்றாக இதை ஆராய்ந்து 6 மாத காலம் ராகுல் காந்தியின் குழு இந்த மோசடிகளை இப்போது வெளிச்சப்படுத்தி இருக்கிறது.

இப்போது நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் சமர்ப்பித்துள்ள மனு தேர்தல் ஆணையத்தின் மீதான சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது. பீகாரில் நீக்கப்பட்ட 65 இலட்சம் வாக்காளரின் பெயர்களை வெளியிட வேண்டிய அவசியம் இல்லை; அதற்கு எந்த சட்ட விதியும் இல்லை என்கிறது தேர்தல் ஆணையம். இது ராகுல் காந்தி கேட்கும் கேள்வி மட்டும் அல்ல; ஜனநாயகத்தில் வாக்களிக்கும் உரிமை பெற்ற அனைத்து வாக்காளர்களும் கேட்கும் கேள்வியாகும்.

ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டிய தேர்தல் ஆணையமே ஜனநாயக வழிமுறைகளை பின்பற்ற மறுப்பது மிகப்பெரும் அவமானம்!

இந்துத்துவ ஜனநாயகம் சம உரிமைகளைப் பறிக்கிறது, இந்துத்துவ தேர்தல் ஆணையம் அதற்கு ஏற்ற வகையில் மோசடி தேர்தலுக்கு வழி அமைத்துத் தருகிறது. பொதுவெளிக்கு விவாதம் வந்தபிறகு ஒளிவுமறைவின்றி தெளிவுபடுத்துவது ஆணையத்தின் கடமை.

# தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்துக்கு கழகம் ஆதரவு!

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களின் பதிவு:

"வேறு எந்தப் பிரிவினரின் போராட்டத்தையும்விட தூய்மைப் பணியாளர்களின் போராட்டத்திற்கு முன்னுரிமை தர வேண்டியதுதான் சமூக நீதி அரசின் முதன்மையான கடமையாகும்". சென்னையில் தூய்மைப்பணியாளர்கள் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.அவர்கள் தங்களின் வேலை உத்தரவாதத்திற்கும், ஊதியம் குறைக்கப்படக்கூடாது என்பதற்கும் போராடுகிறார்கள். பேச்சுவார்த்தை என்ற பெயரில், போராட்டத்தை உடைப்பதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் வருகின்றன.

மழை வெள்ளம் வரும்போதும், புயல் வீசும்போதும் பாதிப்புகளில் இருந்து மக்களை காப்பாற்றும் சுமை, தூய்மைப் பணியாளர்கள் உழைப்பின் மீதுதான் விழுந்து கிடக்கிறது. வெள்ளத்தால் சென்னை நகரம் பாதிக்கப்பட்டபோது, தூய்மைப் பணியாளர்கள்தான் சென்னையை மீட்டெடுத்தார்கள். அதற்காக தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு பாராட்டு விருந்து அளித்து மதிப்புத்தொகை வழங்கியதையும் நினைவுபடுத்த வேண்டும்.

ஆதிதிராவிடர் பழங்குடி பள்ளிகளில் படித்த மாணவர்களை உயர்கல்விக்கு அழைத்துச் செல்லும் திட்டங்களை அமல்படுத்துகிற தமிழ்நாடு அரசு, தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை ஏன் இழுத்தடிக்க வேண்டும்? அறிவுப்பணிக்கு உயர் ஊதியம்; உடல் உழைப்புப் பணிக்கு குறைந்த ஊதியம் என்ற வர்ணாசிரமப் பார்வைதான் இங்கே நிலவிக் கொண்டிருக்கிறது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போன்ற பிரிவினருக்கு நிர்ணயிக்கப்படும் ஊதியத்தைப் போல், திராவிட மாடல் அரசு தூய்மைப் பணியாளர்களுக்கும் ஊதியம் நிர்ணயிக்க முன்வர வேண்டும். ஏழு நாட்களாக பேச்சு வார்த்தை இழுத்தடிக்கப்படுகிறது என்றாலே, போராட்டத்தை பலவீனப்படுத்தும் முயற்சிதான்! ஆதிதிராவிடர் பள்ளிகளில் படித்த மாணவர்களை உயர்கல்வி வரை அழைத்துச் செல்கின்ற தமிழ்நாடு அரசு, தூய்மைப் பணியாளர்களின் இந்த போராட்டத்தைத் தொடர்வதற்கு அனுமதிக்காமல், அவர்கள் கோரிக்கையை ஏற்று செயல்படுத்த முன்வர வேண்டும். முதலமைச்சர் உடனடியாக தலையிட வேண்டும்.

விடுதலை இராசேந்திரன்
பொதுச் செயலாளர்
***10.08.25.***

# பெரியார் முழக்கத்துக்கு பாராட்டு

"பெரியார் மண்" என்ற தலைப்பில் பெரியார் தொண்டர்கள் சாதனை குறித்து "முரசொலியில்" ர.பிரகாசு எழுதி வரும் கட்டுரைத் தொடரை "பெரியார் முழக்கம்" தொடர்ந்து வெளியிட்டு வருவது மகிழ்ச்சி தருகிறது. பெரியார் தொண்டர்கள் கிராமங்களில் நடத்தியப் புரட்சிகளை படிக்கும்போது மெய் சிலிர்க்கிறது. எதிர்ப்புகளில் எதிர்நீச்சல் போட்டு அவர்கள் போட்டுத் தந்த பாதைகளில்தான் நாம் இன்றைக்கு எளிதாகப் பயணித்துக் கொண்டு இருக்கிறோம். கரடுமுரடான பாதைகளில் அவர்கள் நடந்தார்கள். நாம் நெடுஞ்சாலையில் வாகனத்தில் வசதியாக பயணிக்கிறோம்.

3-ம் பக்கத்தில் "கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை" கட்டுரைகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. மதவெறிக்கு பலியான பகுத்தறிவாளர்களின் பட்டியலை ரிவோல்ட் வெளியிட்டுள்ளதை பெரியார் முழக்கம் வெளியிட்டுள்ளது மிகவும் சிறப்பு. பெரியார் நடத்திய இதழ்கள் 1930ஆம் ஆண்டிலேயே எவ்வளவு அறிவு செறிவோடு வெளிவந்திருக்கிறது என்பது வியக்க வைக்கிறது. அதே கட்டுரையில் "நான் தூக்கு மேடையில் நின்று கொண்டு பரிசுத்த நாத்திகன் என்று கூப்பாடு போட்டு சொல்வேன்" என்ற பெரியார் பேச்சை 1929 குடிஅரசு இதழிலிருந்து எடுத்து "பெரியார் முழக்கம்" வெளியிட்டு இருக்கிறது. இப்படி ஒரு பெரியார் பேச்சை நான் இப்போதுதான் கேள்விப்படுகிறேன். இந்த வரலாற்றுப் பதிவுகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

**மு.சாமிநாதன்**
***நாமக்கல் மாவட்டத் தலைவர்***

# மடியட்டும் ஆணவப் படுகொலைகள்

தமிழ்நாடு அரசு ஆணவக் கொலை தடுப்புச் சட்டம் ஒன்றை கொண்டு வர வேண்டும் அது மிகவும் அவசியம். ஆனால் ஆணவக் கொலை தடுப்புச் சட்டங்கள் கொண்டு வருவதோடு ஜாதி எதிர்ப்பு இயக்கங்களின் கடமைகள் முடிந்து விடக்கூடாது. ஜாதி எதிர்ப்புக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையினரை ஜாதி மறுப்பாளராக மாற்ற வேண்டும். பெரியார் இயக்கம் ஜாதி ஒழிப்புக்காக ஜாதியை பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்தது, இட ஒதுக்கீட்டுக்காகப் போராடியது. இந்த சட்டப் போராட்டங்கள் மிகவும் தேவை. அதே நேரத்தில் பெரியார் ஒவ்வொரு கூட்டத்திலும் ஜாதி எதிர்ப்புக் கருத்துக்களை மக்களிடம் பேசினார், எழுதினார், ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தினார்.

இட ஒதுக்கீடு உரிமைச் சட்டங்கள் ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டங்கள் என்ற சட்டப் போராட்டங்களோடு சமுதாயத்தில் ஜாதி ஒழிப்புக்கான இயக்கங்களை நடத்த வேண்டும். "மடியட்டும் ஜாதி படுகொலைகள்" என்ற தலைப்பில் 7.08.2025 பெரியார் முழக்கம் வெளியிட்டுள்ள முதல் பக்க கட்டுரை எழுப்பும் கேள்விகள் மக்களை சிந்திக்க வைக்கக் கூடியவை. மக்கள் மனதில் பதியச்செய்யும்? கேள்விகளாக இருக்கின்றன. இந்த கேள்விகளை அமெரிக்காவிலும் கேட்க வேண்டி இருக்கிறது. எனவே பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்டம் நடத்தும் "கனடியன் ரேஷனலிஸ்ட்" ஆகஸ்ட் இதழில் இந்த கட்டுரையை மறுபதிப்பு செய்ய உள்ளோம். பெரியார் முழக்கத்துக்கு எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிப், ஒருங்கிணைப்பாளர்
பெரியார் அம்பேத்கர் வாசகர் வட்டம், கனடா.

# இந்தியாவின் முதல் நாத்திகர் மாநாடு

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை (10)

நம் நாட்டு வரலாற்றில் முன் எப்போதும் நடந்திராத புதுமையானதொரு மாநாடு சென்னை எழும்பூரில் அமைந்த 'ஒயிட்ஸ் மெமோரியல் ஹால்' என்ற மண்டபத்தில் *31-12-1933* அன்று வெற்றியாக நடந்தேறியிருக்கிறது. நாஸ்திகர் மகாநாடு என்று அழைக்கப்பட்ட அம்மாநாட்டின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை விரிவாகப் 'புரட்சி' ஏடு தந்தது. நாடெங்கிலுமிருந்து கணக்கற்ற எண்ணிக்கையில் மக்கள் வந்து கலந்து கொண்டார்கள். குறிப்பாக, படிப்பறிவு பெற்ற நிறையப் பெண் வீராங்கனைகள் மாநாட்டில் பங்கேற்ற செய்தியைப் படிக்கும்போது பெருமையாக இருக்கின்றது. இம்மாநாட்டில் கருத்துரைகள் ஆற்றிய சான்றோர்தம் சுவையான சில சொற்பொழிவுகள் படிப்பவர் எவருக்கும் உணர்ச்சியூட்டும் என்பதில் அய்யமில்லை. வரவேற்புரை நிகழ்த்திய சி.கே. குப்புசாமியின் கருத்துரை ஒவ்வொருவருக்கும் சிந்தனை விருந்தாகும்.

"நாஸ்திகர்களெல்லாம் ஒன்று சேர்ந்து சென்னை மாகாணத்தில் முதன் முதலாக மாகாண நாஸ்திகர் மகாநாட்டைக் கூட்டியிருக்கிறோம். இதிலிருந்து உலகத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பாமர மக்களுக்கும் நாஸ்திக உணர்ச்சி அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. நாஸ்திகம் என்றால் என்ன? சர்வசக்தி, சமகுணம், தயாளகுணம், ஜீவகாருண்யம், அன்பு, சமதர்மம் இவ்வித குணங்கள் நிறைந்த ஒரு கடவுள் உண்டென்று ஆஸ்திகர்கள் கூறுவதை அறிவுள்ளவர்கள் மறுப்பதே நாஸ்திகம். தயாளகுணங்கள், ஜீவகாருண்யம், பூர்ண சக்தியுள்ள கடவுள் உலகத்தவர்களுக்கு வறுமையையும் பிணியையும் சச்சரவுகளையும் குரோத புத்தியையும் ஏன் சிருஷ்டித்திருக்க வேண்டும்?

உலகத்தில் முதலாளி, தொழிலாளி, உயர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை, ஜமீன்தாரன், குடியானவன், உழைப்பாளி, சோம்பேறி இவ்வித வித்தியாசங்கள் நிறைந்திருக்கின்றன. இவ்விதக் கொடுமைகளைக் கடவுள் சிருஷ்டித்திருந்தால், கடவுளை யோக்கியமற்றவன் என்றும் நீதியற்றவன் என்றும் உலக துரோகி என்றும் பாரபட்சமுடையவன் என்றும் கொலையாளி என்றும் நயவஞ்சகமுடையவனென்றும், தீய குணங்கள் நிறைந்த திருடனென்றும் உலக முட்டாள் என்றும் அறிவுள்ளவர்கள் கூறினால் அவர்களை நாஸ்திகர்களென்று ஆஸ்திகவாதிகள் கூறுகிறார்கள். கடவுள் என்ற பதத்தை அகராதியினின்று எடுத்து விட வேண்டும்".

-(புரட்சி: 7-1-1934).

சிங்காரவேலர் அவர்களைத் தலைவராகவும், ஜீவானந்தம் அவர்களை செயலாளராகவும் கொண்டு சுயமரியாதை இயக்கம் நாத்திகர் சங்கத்தைத் தொடங்கியது. இந்தியாவிலே முதல் நாத்திகர் மாநாடு சென்னையில் நடந்தது. நாத்திகர்கள் பதிவு ஏடு உருவாக்கப்பட்டது. பலரும் நாத்திகர்களாக பதிவு செய்தனர். மாநாட்டு நிகழ்ச்சிகளை பெரியார் நடத்திய 'புரட்சி' வார ஏடு, பதிவு செய்துள்ளது.

### எஸ். நீலாவதி அம்மையாரின் திறப்புரை

நாத்திகர் மாநாட்டினைத் திறந்து வைக்கும் பொறுப்பு பெண்மணி ஒருவருக்கு அளிக்கப்பட்டமை இவ்வியக்கத்தின் தனித்தன்மையினைக் காட்டுவதாகும். திருச்சி எஸ். நீலாவதி அம்மையாரின் திறப்புரை சூடு நிரம்பியதாயிருந்தது.

"இங்கு கூட்டப்பட்டிருக்கும் நாஸ்திக மகாநாடானது ஒரு நூதன மகாநாடென்று கூறப்படுவதற்கு உரித்தாகும் (பொருத்தமானதாகும்). இம்மகாநாட்டிற்கு மூலகாரணமாயுள்ள சுயமரியாதை இயக்கம் சுமார் 9 ஆண்டுகளாகச் செய்து வந்த வேலைகளின் பயனாகவே இன்று சென்னையில் முதன்முதலாக இந்த மகாநாடு கூடுவதற்குக் காலம் கிடைத்தது.

இன்றைய நாஸ்திக மகாநாட்டிற்கு இடையில் இன்னும் பல நூதன மகாநாடுகளைக் கூட்டினோம். ஜமீன்தாரர் அல்லதார் மகாநாடு, பணக்காரர் அல்லாதார் மகாநாடு, லேவாதேவிக்காரர் (வட்டிக்கடை நடத்துவோர்) அல்லாதார் மகாநாடு முதலிய அல்லாதார் மகாநாடுகளையும் கூட்டுவித்து நமது அபிப்பிராயங்களைப் பொதுமக்கள் பலரும் அறியுமாறு செய்தோம். அதிலிருந்து இன்னும் ஒரு படி அதிகமாகப் பச்சை நாஸ்திகர் மகாநாடு துவக்கிவிட்டோம். நமது இயக்கம் உலக மக்கள் யாவருக்கும் பொதுவானது.

நமது இன்றைய மகாநாட்டின் நோக்கம் மதம்-கடவுள் ஒழிய வேண்டும்; அதை மெருகு கொடுத்துப் புகழுபவர்களின் மதிப்பை அழிக்க வேண்டும் என்பதே. நம்மை என்ன வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளட்டும். உலகத்திலேயே நாஸ்திகனுக்குத்தான் அதிகப் பொறுப்பு இருக்கிறது. நான் தப்பு செய்து விட்டேனானால் அதற்கு உண்மையில் நான் உதித்தாரார் (பொறுப்பு) ஆகிறேன். உடனே திருத்திக் கொள்ள வேண்டுமென்று உணருகிறேன். ஆஸ்திகன் அப்படியல்ல. என்ன தப்பு வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் ஒரு தேங்காயோ பாவசங்கீர்த்தனப் பெட்டியோ அவ்வயோக்கியத் தனங்களை நிவர்த்தி செய்து விடும் என்கிறான்."

– 'புரட்சி': 7-1-1934.

### தோழர் ம.சிங்காரவேலரின் தலைமையுரை

மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்ற அறிஞர் பொதுவுடைமைத் தோழர் ம. சிங்காரவேலர் அரியதொரு தலைமையுரை வழங்கினார்.

"இந்தியா முழுமைக்கும் இந்த மகாநாடே முதல் நாத்திக மகாநாடு என்று சொல்லலாம். இந்த மகாநாட்டால் நமது இந்திய தேசத்திற்கு நன்மை உண்டாகுமேயல்லாமல், கெடுதியாதொன்றும் விளையாது. ஆனால் அறியாதோர் சிறுபிள்ளைத்தனமாக இம்மகாநாட்டைப் பரிகாசம் செய்வார்கள்.

மூட உலகம் நன்மை அளிக்கும் இயக்கங்களை முதலில் பழித்தே வந்திருக்கிறது. பழிப்பதோடு நில்லாமல் இம்சித்தும் வந்திருக்கிறது. நாஸ்திக போதகரான இங்கர்சாலை அமெரிக்க நாடு முழுமையும் பழித்தது. இன்று அவரின் நூறாம் ஆண்டுப் பெருநாளைக் கொண்டாடுகிறது. அய்ம்பது வருஷத்துக்கு முந்தி, ஆங்கில நாஸ்திகரான ப்ராட்லாவை ஆங்கில நாடு சிறையிலிட்டது. இன்று அவருடைய ஜுபிலியைக் கொண்டாடுகிறது. இன்று நாஸ்திகர்களாகியவர்கள் பழிக்கப்படுவர்; இம்சிக்கப்படுவர். ஆனால் இந்த மகாநாட்டைப் போன்ற அரிய பெரிய நாஸ்திக மகாநாடுகள் தேசமுழுமையுமே நாஸ்திகத்தைப் பரவச் செய்யும். காலப்போக்கில் இந்த மகாநாட்டை உண்டாக்கியவர்களை உலகம் மறந்து விடும். ஆனால் அவர்கள் நாஸ்திக விஷயமாகக் கொண்ட எண்ணங்கள் மக்களை மூட நம்பிக்கைகளிலிருந்து விடுவித்து சுகப்படுத்தும் என்பதற்குத் தடை இல்லை.

உலகில் நாஸ்திகம் ஒரு பழமையான சித்தாந்தம். ஆஸ்திகம் உண்டான போதே நாஸ்திகமும் உண்டானது. கடவுள் உண்டு என்ற சொல் கிளம்பியதும் கடவுள் இல்லை என்ற சொல்லும் கிளம்பியது. ஆதி மனிதன் பேசுவதற்கு முந்தி ஆஸ்திகம் என்பதே அறியான். பேசத் தெரிந்த பிறகே 'கடவுள்', 'தெய்வம்', 'பேய்', 'பிசாசு', 'உயிர்', 'ஆத்மா' என்ற சொற்களை உச்சரிக்க ஆரம்பித்தான். காட்டுமிராண்டிகளில் சிலர் கடவுள்' என்ற சொல்லே தங்களுக்குத் தெரியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். சில பாதிரிமார்கள் அன்னோரிடம் கடவுளைப் பற்றிக் கேட்டபோது அந்தச் சொல்லே தங்கள் பாஷையில் இல்லை என்றார்களாம்! இவர்களை ஆதி நாஸ்திகர்கள் *Primitive Atheists*- என்று எண்ணலாம். எனவே ஞாயமுறையில் நாஸ்திகன் என்ற பதத்தில் யாதொரு இழிவுமில்லை. ஆனால் மதஸ்தர்கள் தங்கள் மூட வைராக்கியத்தாலும் மூடதுவேஷத்தாலும் நாஸ்திகர்களை இகழ்ந்தும் இம்சித்தும் வந்திருக்கின்றனர்."

### தோழர் ப.ஜீவானந்தம் உரை

நாத்திகர் சங்கச் செயலாளராக இருந்த ப.ஜீவானந்தம் நாத்திக பிரச்சாரம் ஏன்? என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை *21-1-1934*-ஆம் நாளிட்ட 'குடிஅரசு' இதழில் வெளியானது. அதன் ஒரு பகுதி இதோ:

"நமது இலட்சியத்தை நோக்கிச் செல்லும் பாதையில் காணப்படும் முட்டுக்கட்டைகளும் தடைக்கற்களும் பற்பல. அவற்றில் முக்கியமானவற்றில் இரண்டு மதமும் கடவுளும். சென்ற காலச் சீர்திருத்த வீரர்கள் இவற்றின் எதிர்ப்புக்கு ஆளாக அஞ்சினர். மக்கள் மனப்பான்மையில் புரட்சி உண்டு பண்ண அவர்கள் பயந்தனர். நமக்கோ நமது கோரிக்கைதான் பிரதானமே யொழிய ஏற்படும் இடையூற்றை யொட்டிய பரிசுத்தப் பெயர்களைப் பற்றிக் கொஞ்சங்கூடக் கவலையில்லை. இக்காரணத்தால்தான், பொதுஜனங்கள் தாங்களாகவே யோசித்துத் தீர்மானிக்கத்தக்க நிலைமையை உண்டாக்க முயற்சிக்கிறோம். பொதுஜனங்கள் சுயேச்சையாகச் சிந்திக்கும் மார்க்கம் ஏற்படாதவரையில் கோரிய பலனை அடையலாமென்பது வீண். ஒரு முறை பொது ஜனங்கள் தாங்களாகவே சிந்திக்கத் தொடங்கிவிட்டால், பின், முன்னேற்றப் பாதை திறக்கப்பட்டு விடும்.

அறிவியல்வாதிக்கு ஆஸ்திக வாதம் ஒத்துவராது. மனித வர்க்கத்தைத் தக்க வழியில் செலுத்த வேண்டுமென்று விரும்பும் சீர்திருத்தக்காரர்கள், புரட்சிக்காரர்களெல்லோரும் அஞ்சா நெஞ்சர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் அஞ்சா நெஞ்சராய் இருக்க வேண்டுமானால் அவர்கள் அறிவியல்வாதிகளாகி. சுயேச்சா சிந்தனா சக்தியை வளர்க்க வேண்டும். விதிவிலக்கின்றி சகல அறிவியல்வாதிகளும் (*Free Thinkers*) மனித வர்க்கத்தை நேசிப்பவர்களே, எத்துறையில் அஞ்சாது சீர்திருத்தம் செய்ய வேண்டுமானாலும் ஆஸ்திகம் குறுக்கே படுத்து வழியை மறிப்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே பிறரைப் புண்படுத்தவல்ல, மக்களின் சுயேச்சை சிந்தனா சக்தியை வளர்க்கும் பொருட்டு நாம் நாஸ்திகம் பிரசாரம் செய்து தீர வேண்டியவர்களாய் இருக்கிறோம்."

**ஆதாரம் : பெரியார் பேருரையாளர் இறையன் எழுதிய 'இதழாளர் பெரியார்' நூல்**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சுயமரியாதைக்காக கருப்புச் சட்டை ஏந்திய ‘கீழப்பாலையூர்’ [13]

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை ‘முரசொலியில்’ ர.பிரகாசு எழுதி வருகிறார். கீழப்பாலையூர் வரலாறு இது.**

ராஜராஜன் காலத்தில் சமணப்பள்ளியைக் கொண்டிருந்த ஊர், தஞ்சை பெரிய கோயிலின் தென்புறக் கருவறைச் சுவற்றில் பெரிய நெல் களம் குறித்த வரலாற்றுக் குறிப்பு என திருவாரூரில் உள்ள கீழப்பாலையூருக்கு வரலாற்றுப் பெருமிதங்கள் ஏராளம் சொல்லப்படுகின்றன.

ஆனால், டெல்டா பகுதியில் நிலவிய கொடூரமான ஜாதிய- பண்ணை அடிமைத் தனத்திற்குத் தப்பாத பகுதி என்ற வரலாறு பதிவாகவில்லை. சுற்றியிருந்த சுமார் 50 கிராமங்களிலும் நிலமும் ஆதிக்கமும் விரல் விட்டு எண்ணக்கூடிய பார்ப்பனர்கள் வசம்தான் இருந்தன. ராமசுப்ரமணிய ஐயர், சேஷாத்ரி ஐயர் போன்றோரிடம்தான் கீழப்பாலையூர் மண்ணும் மக்களும் சிக்குண்டு இருந்தனர். அக்ரஹாரத் தெருவுக்குள் ஆடு, மாடுகள் நுழையலாம். ஆனால், ஐயர் வயலில் கூலியாட்களாக இருந்த தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்துவிடக்கூடாது.

பிற்படுத்தப்பட்டவர்கள் ஆடு, மாடுகளை அக்ரஹாரத் தெருவுக்கு வெளியே கொண்டு விடுவார்கள். மீண்டும் மாலையில் அக்ரஹாரத் தெருவுக்கு வெளியே ஆடு, மாடுகளைத் தாழ்த்தப்பட்டவர்கள் விட்டுவிட்டால், பிற்படுத்தப்பட்டவர்கள் இழுத்துச் சென்று கட்டி விடுவார்கள். அவர்களும் செருப்பு போட்டுச் செல்லக்கூடாது.

தாழ்த்தப்பட்டவர்கள் பொதுக்குளத்தில் விரலைக் கூட நனைக்கக் கூடாது. ஆனால், இந்தக் கொடுமைகள் எல்லாம், கீழப்பாலை யூருக்குள் திராவிடர் கழகக் கொடி பறப்பதற்கு முன்பு வரைதான். அருகே, இருந்த மஞ்சக்குடி, நரசிங்கம்பேட்டை கிராமங்களில் வேர் விட்டிருந்த திராவிடர் கழகம், அதன் முன்னோடிகளாக இருந்த தளபதி, கல்யாணி, முத்துக்கிருஷ்ணன், சீனிவாசன் பிள்ளை, சிவானந்தம் போன்றோரின் வீரியம் மிக்க களப்பணிகளால் குடவாசல் முழுக்கப் படரத் தொடங்கியது.

மக்களை அலை அலையாய் திராவிடர் கழகத்தை நோக்கி வந்தனர். மஞ்சக்குடி, சேங்காலிபுரம், குடவாசல் ஆகியவை இன்றும் சிறுகிராமங்கள்தான். ஆனால், சாலை வசதியே இல்லாத அந்தக் காலகட்டத்திலேயே பலமுறை இங்கெல்லாம் வந்து சென்றிருக்கிறார் பெரியார். குறிப்பாக, தாழ்த்தப்பட்டோருக்குத் தனிக் கிணறு, தனிப் பள்ளி போன்ற காந்தியடிகளின் கொள்கைகளைப் பின்பற்றி சேங்காலிபுரத்தில் பள்ளிக்கூட கட்டுமான முயற்சிகள் தொடங்கின. ஆனால், ‘பொதுப்பள்ளியில் தாழ்த்தப்பட்டோரை அனுமதி, அதுதான் ஜாதி ஒழிப்புக்கு வழிவகுக்கும்’ என போர்க்கொடி தூக்கினார் பெரியார். தனிப் பள்ளி கட்டும் முயற்சி தவிடுபொடியானது.

கீழப்பாலையூர் கிராமமும் தங்கள் சுயமரியாதை காக்க கருப்புச்சட்டையைக் கவச மாக ஏந்தியது. பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம், கோயில் நுழைவுப் போராட்டம் என இடைவிடாத போராட்டத் தால் ஆதிக்கவாதிகளை வீழ்த்தினர். இன்றும் கீழப்பாலையூரில் சுமார் 40 வீடுகளில் கருப்புச் சட்டையின் இருப்பு இருக்கிறது. கோயில் திருவிழாவைப் பிற்படுத்தப்பட்ட– தாழ்த்தப்பட்ட சமூகங்கள் இணைந்தே இன்றும் கொண்டாடுகின்றன. ஊர்த்தெருவுக்குள் போகும் சாமி சிலை, தவறாமல் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கும் செல்கிறது.

ஜாதியத்தின் கோரத்தைத் தணித்து, சமத்துவத்தை ஏந்தி நிற்கும் கீழப்பாலையூரில் இன்றும் அக்ரஹாரம் இருக்கிறது. ஆனால், பார்ப்பனர்கள் யாரும் அங்கே இல்லை. ஐயனார் குளம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால், ‘நான் மட்டும்தான் தண்ணீர் எடுப்பேன்’ என்று சொல்ல எவருக்கும் அங்கே துணிச்சல் கிடையாது! காரணம் அது இன்று ‘பெரியார் மண்’.

# ஆணவப் படுகொலை சட்டம் கோரி பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்!

ஆணவப் படுகொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்றக் கோரியும், நெல்லை கவின் படுகொலை செய்தவர்கள் அனைவரின் மீதும் கடுமையான தண்டனையை நிறைவேற்ற கோரியும் கண்டன ஆர்பாட்டம் பொள்ளாச்சி மாவட்டக் கழகம் சார்பில் 6.8.2025 அன்று பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் தோழர் யாழ் வெள்ளியங்கிரி தலைமையில் நடைபெற்றது. சபரிகிரி வரவேற்புரையாற்றினார். மாரிமுத்து (தி.க), சண்முகவேல் பிரபாகரன் (திஇதபே), தமிழ் குமரன் (ஆதித்தமிழர் பேரவை), வழக்குரைஞர் சேதுபதி (தமிழ் தன்னுரிமை மீட்பு இயக்கம்), மாரிமுத்து (மவிமு), தமிழ் பிரபாகரன் (மே17), மற்றும் கழகத் தோழர்கள் ரூபா, ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். இலக்கியா நன்றியுரை ஆற்றினார்.

# சுயமரியாதை இயக்க சாதனை;

## குடியாத்தத்தில் கழகத் தலைவர் பேச்சு



வேலூர் மாவட்டக் கழகம் சார்பில் குடியாத்தம் ஒன்றியத்தில் 08.08.2025 அன்று பரதராமி பேருந்து நிலையம் அருகில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்ட நிகழ்விற்கு கழக குடியாத்தம் ஒன்றியச் செயலாளர் அ.அமல்ராஜ் தலைமையேற்றார்.

மோ. வை. யாழினி வரவேற்புரை -யாற்றினார். மதுரை சித்திரை சேனன், தெரு விளக்கு கோபிநாத் பெரியார், பகுத்தறிவுப் பாடல்கள் பாடினார்கள். நாடக கலைஞர் ச. பார்த்திபன் குழுவினர் பறைஇசை வாசித்தனர். சிறப்பு நிகழ்வாக ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட தோழர்கள். விமல் - ரேணுகோபால், தீபலட்சுமி - பாஸ்கரன், நந்தாதேவி - முரளி, மீனா - வேல் ராஜ்குமார் திருமணம் செய்து கொண்ட தோழர்கள் மற்றும் விதவை மறுமணம் செய்து கொண்ட தோழர்கள் ஷாலினி - சுரேஷ் குமார் ஆகியோரை கழகத் தலைவர் பாராட்டி நினைவுப் பரிசு வழங்கினார். கலை இலக்கிய பேரவை மாநில துணைச் செயலாளர் திமுக, நிறுவனர் முரசொலி தமிழ் மன்றம் திரு.கெம்மாங்குப்பம், சி. கோபி மற்றும் நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்கள்.

மோ.வை.கயல்விழி நன்றியுரை ஆற்றினார். திலீபன் (வேலூர் மாவட்ட தலைவர்), சிவா (மாவட்டச் செயலாளர்), சதீஷ் குமார் (மாவட்ட பொருளாளர்), சுரேஷ் (மாவட்ட அமைப்பாளர்), தெருவிளக்கு கோபிநாத் (வேலூர் மாவட்ட அறிவியல் மன்ற தலைவர்), ரேணு (வேலூர் மாவட்ட அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர்), அன்பு (தமிழ்நாடு மாணவர் மன்ற மாவட்ட பொருளாளர்), சதீஷ் (பெரியார் வாசகர் வட்டம் ), வழக்கறிஞர் பாலகுமரன், வழக்கறிஞர் மருதன் மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் தோழமை அரசியல் கட்சியினர், தோழர்கள் கலந்து கொண்டனர்.



10.08.2025 அன்று கழக செயல்பாடுகளை இணையத்தில் தொடர்ந்து கவனித்து வந்த தோழர் ந.கௌரி சங்கர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) மற்றும் ம.கி எட்வின் பிரபாகரன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். தோழருக்கு கழக வெளியீடுகளை வழங்கி வரவேற்றனர்.



# ஈரோட்டில் ஜாதிமறுப்பு இணையர்கள் ஒன்றுகூடல்; மாவட்டக் கழகம் முடிவு!



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் 10.8.25 அன்று ஞாயிற்றுக்கிழமை, ஈரோடு சூரம்பட்டி நால்ரோடு மதிமுக அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் செல்வராசு தலைமை தாங்கினார். எழிலன்( மாவட்டச் செயலாளர்) வரவேற்புரை ஆற்றினார். மாநில அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் எதிர்வரும் செப்டம்பர் 7ஆம் தேதியன்று ஈரோட்டில் ஜாதி மறுப்பு இணையர்களின் ஒன்று கூடல் நிகழ்வை முழு நாள் நிகழ்வாக நடத்துவது என்றும், தமிழ்நாடு முழுவதும் இருந்து ஜாதி மறுப்பு இணையர்களை அணிதிரட்டுவது என்றும், சிறப்பு அழைப்பாளர்களாக தலைவர் பொதுச் செயலாளர் உள்ளிட்டோரை அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. கிருஷ்ணன், குமார், ஆசிரியர் சிவக்குமார், கிருஷ்ணமூர்த்தி, கார்மேகம், நல்லதம்பி, சசிக்குமார் போதி சத்துவா, விருதுநகர் செந்தில், வீரப்பன்சத்திரம் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சட்டப்பல்கலை கழகத்தில் விடுதி வசதி வேண்டி போராட்டம்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் சட்டப் பல்கலைக் கழகத்தில் விடுதி வசதி கேட்டு தமிழ்நாடு மாணவர் கழகம் போராட்டம்! சென்னை தரமணியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சீர்மிகு சட்டப் பள்ளியில் (SOEL) அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% இட ஒதுக்கீட்டின் கீழ் பயிலக்கூடிய மாணவர்களுக்கு விடுதி வசதி வேண்டி 5வது முறையாக கடந்த 05.08.25 அன்று முதல் உள்ளிருப்பு போராட்டம் நடைபெற்றது. 08.08.25 திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார், திருவல்லிக்கேணி பகுதி மலைவர் கோபிநாத், தோழர்கள் முழக்கம் உமாபதி, மயிலை அசோக் ஆகிய தோழர்கள் மாணவர்களை சந்தித்து ஆதரவை தெரிவித்தனர்.

தமிழ்நாடு மாணவர் கழகம், இந்திய மாணவர் சங்கம் மற்றும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய மாணவர் இயக்கங்கள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை பல்கலைக்கழக வாசலில் நடத்தினர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, இந்திய மாணவர் சங்க மாநிலச் செயலாளர் அரவிந்தசாமி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியில் மாநிலப் பொறுப்பாளர் தீரன், திராவிடர் விடுதலைக் கழக தென்சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மாணவர் இயக்கத் தோழர்கள் என 50-க்கும் மேற்பட்டவர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : August 14, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran